**தலைப்பு 408 பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரச்சாமான்கள் மற்றும் கிராமப்புற தொழில்துறை மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரச்சாமான்கள் மற்றும் கிராமப்புற தொழில்துறை மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 ஆம் இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரச்சாமான்கள் மற்றும் கிராமப்புற தொழில்துறை மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சின் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 ஜூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரச்சாமான்கள் மற்றும் கிராமப்புற தொழில்துறை மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சு வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சு நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதி செயலாற்றல் கூற்றில் ஒப்பீட்டான பெறுமானங்களின் கீழ் காட்டியுள்ள முற்பண பீ கணக்கின் கீழான பெறுவனவு மற்றும கொடுப்பனவு மீதிகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் 2 ஆம் வேலைத் திட்டத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாட்டு ஒதுக்கீடாக ரூபா 2,000 மில்லியன் பெற்றிருந்த போதும் அதனை நிதிக்கூற்றுக்களில் ACA 2, 2(i) மற்றும் 2 (iii) படிவத்தில் குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாட்டின் கீழ் காட்டாது மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டின் கீழான ரூபா 172 மில்லியனுடன் ரூபா பில்லியன் 2.172 என அறிக்கையிடப்பட்டிருந்தது. | இப் பெறுமானங்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தவறுதலாக ஆரம்ப மதிப்பீட்டு ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தேறிய ஏற்பாட்டில் மொத்த மூலதன செலவு ரூபா 2,172 மில்லியன் திறைசேரி கனணி அச்சுக் குறிப்பு பிரகாரம் சரியாக குறிப்பிட்டுள்ளதாக. | ஆண்டினுள் பெற்றுக் கொண்ட குறைநிரப்பு மதிப்பீட்டை நிதிக்கூற்றில் குறைநிரப்பிலான ஏற்பாட்டின் கீழ் காட்ட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 04 மீண்டுவரும் செலவின விடயங்களிற்காக நி.பி 66 கீழ் ரூபா 19,450,000 ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஏற்பாடு மாற்றுதல் மதிப்பீட்டிலான ஏற்பாட்டின் 110 சதவீதம் முதல் 213 வரையான வீச்சளவிலானதால் செலவுகள் மதிப்பீட்டை தயாரிக்கும் போது தேவைப்பாட்டை உரிய முறையில் இனங்கண்டு நடவடிக்கை எடுத்திருக்கவிலிலை என அவதானிக்கப்பட்டது. | இச் செலவின விடயத்தின் கீழான முக்கிய கொடுப்பனவுகளை மேற்கொள்ள செலவுகள் முகாமத்துவத்தின் மூலம் மீதப்படுத்திய செலவு விடயங்கலிருந்து நி.பி 66 இன் கீழ் ஏற்பாடு மாற்றிக் கொண்டுள்ளதாக. | செலவு மதிப்பீட்டை தயாரிக்கும் போது தேவைப்பாட்டை உரிய முறையில் இனங்கண்டு இயலுமான வரை பூரணமாகவும் சரியாகவும் தயாரிக்க வேண்டும். |

## 2.2 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடன் தொகையை செலுத்தி முடிய முன்னர் ஓய்வு பெற்றுள்ள 03 அலுவளர்களிடமிருந்து, மரணித்த 04 அலுவளர்களிடமிருந்து மற்றும் சேவையை விட்டுச் சென்ற 04 அலுவளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 655,706 ஆன கடன் மீதிகள் தொடர்பாக தாபன விதிக்கோவை XXIV அத்தியாயத்தின் 4.5 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிட்டிருக்கவில்லை. | அலுவளர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | தாபன விதிக்கோவை **XXIV** அத்தியாயத்தின் **4.5** பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு ஒரு கிராமிய கைத்தொழில் உற்பத்தியாளரை உருவாக்கும் விஷேட கருத்திட்டத்தின் கீழ் ரூபா 800 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றிலிருந்த 14,016 உற்பத்தியாளர்களை உருவாக்க திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 திசெம்பர் 31 திகதிக்கான முன்னேற்றம் பிரகாரம் 12,388 உற்பத்தியாளர்களை தெரிவு செய்து அதற்காக ரூபா 649.33 மில்லியன் ஏற்பாட்டை செலவிட்டிருந்ததுடன் அத் தெரிவு செய்யப்பட்ட பயன்பாட்டாளர்களுக்கு பிரதேச அபிவிருத்தி குழுவின் அங்கீகாரம் கிடைத்தல் 47 சதவீத மட்டத்தில் காணப்பட்டதால், ஆண்டினுள் எதிர்பார்த்த நோக்கத்தை மேற்கொள்ள முடியாமலிருந்தது. | தெரிவு செய்யப்பட்ட பயன்பாட்டாளர்களின் பெயர் பட்டியலிற்காக பிரதேச அபிவிருத்தி குழுவின் ஒருமைபாட்டை பெற்றுக் கொள்ள முதலாம் கட்டத்தில் நாட்டில் நிலவிய சீறற்ற சுகாதார நிலைமையின் மீது தாமதமொன்று ஏற்பட்ட போதும், அனைத்து பயன்பாட்டாளர் பெயர் பட்டியல்களிற்காகவும் பிரதேச அபிவிருத்தி குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | கருத்திட்டத்தின் கீழான எதிர்பார்த்த நோக்கங்களை ஆண்டினுள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கிராமிய கைத்தொழில் உற்பத்திகளில் விற்பனை மேம்படுத்தும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக ஒதுக்கப்ட்ட ரூபா 30 மில்லியனிலிருந்து வியாபார மேம்படுத்தல் வேலைத்திட்டத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்ய ஒதுக்கப்பட்ட ரூபா 9 மில்லியனால் அதிகரித்துக்கொண்டதன் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கிள செயற்பாடுகளும் திருத்தப்பட வேண்டியிருந்த போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | கைதவறினால் திருத்திய செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்த முடியாமல் போனதாக. | செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரித்த பின்னர் அதற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களை உள்ளிடக்கி திருத்திய செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்து அதனை அங்கீகரத்துக் கொள்ள வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மூலதன சொத்துக்கள் சுவீகரிப்பு ரூபா 23,786,145 ஆன போதும் நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையில் ஆண்டினுள் கொள்வனவின் கீழ் காட்டுவதற்கு பதிலாக ஆரம்ப மீதியுடன் செம்மையாக்கப்பட்டிருந்தது. | கொள்வனவு நிதியல்லாத சொத்தக்கள் அறிக்கையின் ஆரம்ப மீதியுடன் கூட்டுதலின் கீழ் (Add to opening Balance) காணப்படும் கூட்டுத்தொகையான ரூபா.103,880,754 இற்கு உள்ளடங்கியுள்ளது. | ஆண்டினுள் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கள் நிதி கூற்றில், நிதியல்லாத சொத்தக்கள் அறிக்கையின் ஆண்டினுள் கொள்வனவின் கீழ் குறிப்பிட வேண்டும். |

## 4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணி பதவிகளில் 03 சிரேஷ்ட நிலை அலவலர்கள், 03 இரண்டாம் நிலை அலுவலர்கள் மற்றும் ஒரு அரம்ப நிலை அலுவலரின் வெற்றிடங்கள் நிலவியதுடன் தேவைபாட்டை இனங்கண்டு அப் பதவிகள் நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வெற்றிடங்களை நிரப்பிகொள்ளுவதற்காக இலக்கம் **SMRIP/ES/02/01** மற்றும் **2021.02.17, 2021.11.14** மற்றும் **2021.12.27** திகதிய கடிதங்களினூடாக பொது நிர்வாக அமைச்சு அறிவூட்டப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |